55—

வால்பாறை தொகுதியில் தனியார் கலைக் கல்லூரி தொடங்குதல்.

20085-டாக்டர் அ. ஸ்ரீதரன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வால்பாறை தொகுதியில் தனியார் கலைக் கல்லூரி தொடங்க அரசு முன்னுரிமை வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் *(ஆ)* : தற்போது நிதியுதவி பெறும் தனியார் கல்லூரிகள் தொடங்க அரசு அனுமதியளிக்கவில்லை. ஆனால், நிதியுதவி பெறாத தனியார் கல்லூரிகள் தொடங்குவதற்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது. எனினும், வால்பாறை தொகுதியில் புதிதாக நிதியுதவி பெறாத தனியார் கல்லூரி தொடங்க அனுமதி கோரி எந்தவிதமான விண்ணப்பமும் இதுவரையிலும் பெறப்படவில்லை. அவ்வாறு விண்ணப்பம் ஏதும் இனி பெறப்பட்டால் அது விதிகளின்படி பரிசீலிக்கப்படும். எனவே அடுத்த வினாவிற்கு இடம் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப் பகுதியில் பின்தங்கிய வகுப்பினர் அதிகமாக இருக்கிற காரணத்தாலும், மலைவாழ் மக்கள் அதிகமாக இருக்கிற காரணத்தாலும், அரசாங்கத்தால் விதிக்கப்பட்டிருக்கின்ற விதிமுறைகளைத் தளர்த்தி, தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில் அங்கே தனியார் கல்லூரி அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்ட பகுதிகளில் கல்லூரிகள் அமைப்பதில் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். இருப்பினும் அரசாணை எண் 858, நாள் 15-7-1989-ன்படி இருக்கிற நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டாலொழிய தனியார் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்குவதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.